## யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

## தெல்லிப்பழை

# Principal Report
# அதிபர் அறிக்கை

## 2016.05.26

## பரிசளிப்பு விழா - 2016
## Prize Giving



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

## தெல்லிப்பழை

### மகுட வாசகம்

மெய்ப்பொருள் காண்பதறிவு

### தூரநோக்கு Vision

நாட்டின் அபிவிருத்திக்கு உதவக் கூடிய நல்லொழுக்கமும் அறிவும் கொண்ட மாணவர்களை உருவாக்கி சமூகத்திற்கு வழங்குதல்

### நோக்கக் கூற்று Mission

சிறப்பான கல்வி, விளையாட்டு ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்கி நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய ஒழுக்கமுள்ள ஆளுமையுடன் கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

## தெல்லிப்பழை

# நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் – 2016

**இடம்** : **பாடசாலை மண்டபம்**
**காலம்** : **2016.05.26 (வியாழக்கிழமை) காலை 11.30 மணி**
**தலைவர்** : **திரு.கு.திருச்செல்வம் (அதிபர்)**

பிரதம விருந்தினர்
**திரு.மா.ஆனந்தகுமார் அவர்கள்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.ச.கிருபானந்தன் அவர்கள்**
(தொழில் வழிகாட்டல் ஆலோசகர் - வலிகாமம் கல்வி வலயம்)

**திருமதி. ப.சிவஞானராசா**
(கலாச்சார உத்தியோகத்தர், வலி வடக்கு)

சிறப்பு விருந்தினர்கள்
**செல்வி.மு.விஜிதா**
(கிராம அலுவலர், துர்க்காபுரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை - திரு.இ.சேதுநாதன் (பி.அதிபர்)
- ஆசியுரை - பிரம்மஸ்ரீ சு.வரதராஜசர்மா
- தலைமையுரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- மாணவர் கலை நிகழ்வுகள்
- பரிசில் வழங்கல்
- நன்றியுரை - திருமதி.தே.த.அன்ரன் கிறேசியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

# தெல்லிப்பழை

# நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் – 2016

# அதிபர் அறிக்கை

நிறுவுனர் தினமும், பரிசளிப்பு விழாவும் சிறப்புற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை பணிந்து வணங்கி, எமது வித்தியா சாலையின் ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ சுந்தர மூர்த்தி ஐயர் அவர்களை மனத்தில் நினைத்து வணங்கி அதிபர் அறிக்கையினைத் தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருவாளர். மா.ஆனந்தகுமார் அவர்களே! சிறப்பு விருந்தினர்களாக கலந்து எம்மை பெருமைப்படுத்தும் தொழில் வழிகாட்டல் அலுவலர் திருவாளர். ச.கிருபானந்தன் அவர்களே, கலாசார உத்தியோகஸ்தர் திருமதி.பா.சிவஞானராசா அவர்களே கிராம சேவை அலுவலர் செல்வி மு.விஜிதா அவர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் எமது வித்தியாசாலையின் பழைய மாணவரும், ஓய்வு பெற்ற ஆசிரியருமாகிய பிரம்மஸ்ரீ.சு.வரதராஜ சர்மா அவர்களே! அயற் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே, எமது வித்தியாசாலையின் உப அதிபர், ஆசிரியர்களே! மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே! பழையமாணவர் சங்க உறுப்பினர்களே! கல்வி சார ஊழியர் அவர்களே! மாணவர்களே! அனைவருக்கும் எனது அன்புசால் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று வைகாசி 26ம் திகதி எமது வித்தியாசாலையின் ஜனன தினத்திலே வித்தியாசாலையை நிறுவி கல்விப் பணியை தொடக்கிவைத்த சைவப் பெரியாரும். அந்தணர் குலத்தோன்றலுமாகிய பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயா அவர்களின் பணிதனை நினைந்து மனத்திருத்தி அவர்களுக்கு நன்றி செலுத்துவதுடன் இங்கு கல்வி பெற்று சிறப்புற்று முதல் நிலையில் மிளிரும் மாணவமணிகளை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் முகமாக பரிசளித்து கௌரவிப்பதற்காக இங்கு கூடியுள்ளோம்.

அந்நிய ஆதிக்க காலத்தில் பின்னிலையில் தங்கிய சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் திண்ணிய நோக்குடன் ஐயா அவர்களால் திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, 1900 ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் இன்று வரை அயராது கல்விப்பணி ஆற்றிவரும் எமது வித்தியாசாலையின் வளர்ச்சிப் பாதையினை சற்று நினைவு கூர்தல் அவசியமாகும்.

அந்த வகையிலே 1900 ஆண்டு திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1901ல் அரசினர் உதவி நன்கொடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து 1902ம் ஆண்டு முதன் முதலாக வருடாந்தப் பரீட்சை நடாத்தப்பட்டது. தொடர்ந்து வளர்ச்சிப்பாதையிலே 1921ல் முகாமைத்துவப் பொறுப்புக்கள் திரு.தெ.து துரையப்பாபிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1928ம் ஆண்டு பாடசாலை புதிய கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. அதே ஆண்டில் பாலர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1933ல் J.S.C வகுப்பும், 1943 இல் S.S.C வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு கட்டட தளபாட வளங்களையும் பெற்று பாடசாலை சீரிய வளர்ச்சிப் பாதையிலே வளர்ந்து கொண்டிருந்தது. அதற்கேற்ப மாணவர்கள் பாட அடைவிலும் இணைப்பாட விதானத்திலும் உயர் பெறுபேறுகளை எட்டினர். இந்நிலையில் 1995 ல் ஏற்பட்ட யாழ்ப்பாண இடப்பெயர்வில் பாடசாலையும் முழுமையாக இடம் பெயர்ந்தது. மக்களின் இடப்பெயர்வினால் பாடசாலை மாணவர் வளத்தில் ஓர் வீழ்ச்சி நிலையை எதிர்கொண்டது. வளர்ச்சிக் காலத்தில் 500 வரையான மாணவர்களை கொண்டிருந்த பாடசாலை இடம்பெயர்வின் பின்னர் நூறு வரையான மாணவர்கள் மட்டும் கொண்டதாக காணப்படுகிறது.

எனினும் பாடசாலை கட்டிட தளபாடவளங்கள், ஆசிரிய ஆளணி வளங்கள் உயர்நிலையில் காணப்படுவதுடன் மாணவர்களை நிறைவான கற்றல் செயற்பாட்டுடன், இணைபாட விதான வழிகாட்டலிலும் ஆசிரியர்கள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 - 2015 ம் ஆண்டு வரை மாணவர் எண்ணிக்கை

| வகுப்புக்கள் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| தரம் 1 - 5 | 46 | 46 | 43 | 36 | 34 |
| தரம் 6 - 11 | 59 | 53 | 38 | 47 | 51 |
| மொத்தம் | 105 | 99 | 81 | 83 | 85 |

## ஆளணி விபரம் - 2015

| | |
|---|---|
| திரு.நா.சிவநேசன் MEd | அதிபர் (15.04.2015 வரை) |
| திரு.கு.திருச்செல்வம் MEd | அதிபர் (31.08.2015 தொடக்கம்) |
| திரு.இ.சேதுநாதன் BEd | பிரதிஅதிபர்- விஞ்ஞானபாட ஆசிரியர் |
| திரு.பூ.அகிலலோகநாயகம் BSc | ஆசிரியர் - கணிதபாட ஆசிரியர் |
| திருமதி.S.குலசேகரம் BA | ஆசிரியர் - சைவசமயம் உடற்கல்வி |
| திருமதி.த.அ.கிறேஷியன் B.Com | ஆசிரியர்- வணிகக்கல்வி - ஆரம்பக்கல்வி |
| செல்வி.சி.சுகந்தகுமாரி BA | ஆசிரியர் தமிழ் |
| திருமதி.வ.மணிவண்ணன் பயிற்சி | ஆசிரியர் சமூகக்கல்வி |
| திருமதி.வ.செந்தில்வேல். BFA | ஆசிரியர் சங்கீதம் |
| திருமதி.சு.நிதர்சன் பயிற்சி | ஆசிரியர் ஆங்கிலம் |
| திருமதி.சு.உமாகரன் BA | ஆசிரியர் சைவசமயம் - கணினி |
| திருமதி.த.சுதாகரன் BA | ஆசிரியர் ஆரம்பக்கல்வி |
| திருமதி.சு.வைத்திலிங்கம் BA | ஆசிரியர் ஆரம்பக்கல்வி |
| திருமதி.மை.கிருதரன் பயிற்சி | ஆசிரியர் ஆரம்பக்கல்வி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| செல்வி.சொ.கௌதமி BFA | ஆசிரியர் நடனம் (பகுதிநேரம்) |
| திரு.சி.அருளாநந்தசிவம் | பகுதி நேர ஆசிரியர் ஆங்கிலம் |
| திரு.மா.கருணா | காவலாளி (கல்வி சாரா ஊழியர்) |

மேலும் புதிய மாடிக்கட்டிடத்தில் பிரார்த்தனை மண்டபத்துடன் கூடிய அடைக்கப்பட்ட வகுப்பறைகளும் கொண்டதாக பாடசாலை கட்டிட தளபாடங்களில் நிறைவான நிலையில் காணப்படுகிறது.

இந்நிலையில் பாடசாலையின் கணனி கற்கை நிலையம், நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன சிறப்பாக செயற்பட்டு மாணவர்களின் கற்றலுக்கும், இணைப்பாடவிதான அபிவிருத்திக்கும் பணியாற்றுகின்றன. கணனி கற்றல் நிலையத்தில் 5 கணனிகள் மாணவர் கற்றலுக்கு பயன்படுவதுடன் கணினி கல்வியை ஆசிரியர் திருமதி.சு.உமாகரன் வழங்கி வருகிறார். **நூலகம்** - மாணவர்களின் பாட விடயங்களுக்கும், பொது அறிவு விருத்திக்கும் பயன்படும் விதமான 700 தமிழ் நூல்களும், 205 ஆங்கில மொழி நூல்களும் உள்ளன. தமிழ் மொழி ஆசிரியர் செல்வி. சுகந்தகுமாரி. சின்னத்துரை நூலகபொறுப்பாசிரியராக செயற்பட்டு வருகிறார்.

விஞ்ஞான ஆய்வுகூடம் எமது இடைநிலை வகுப்பு மாணவர்களின் விஞ்ஞான பாட செயன்முறை வேலைகளுக்கு ஏற்ற வகையில் காணப்படுகிறது. எனினும் உரிய செயற்பாட்டு மேசைகளும், தளபாடங்களின் பற்றாக்குறை காணப்படினும் விஞ்ஞான பாட ஆசிரியர் திரு.இ.சேதுநாதனின் வழிகாட்டலில் விஞ்ஞான பாட செயன்முறை வேலைகள் செயற்படுத்தப்படுகின்றன. மேலும் சங்கீத நடன பாடங்களுக்கு தனியான அறைகள் இல்லாதுவிடினும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் இருக்கும் வளங்களைச் சிறப்பாக பயன்படுத்தி மாணவர்களை அழகியல் கல்வி வழிகாட்டலைச் செயற்படுத்துகின்றனர்.

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு -2015

| | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| தேற்றிய மாணவர்கள் | 11 | |
| 100 புள்ளிக்கு மேல் பெற்றோர் | 02 | 18.1 % |
| 70 புள்ளிக்கு மேல் பெற்றோர் | 05 | 45.5 % |

## க.பொ.த. (சா.த) பரீட்சைப் பெறுபேறு - 2015

| | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| தோற்றியோர் | 06 | - |
| தமிழ் மொழி சித்தி | 05 | 83.3 % |
| கணிதம் சித்தி | 02 | 33.3 % |
| உயர்தர தகுதி பெற்றோர் | 02 | 33.3 % |

(உயர்தரத்திற்கு தகுதி - கணிதம், தமிழ் உட்பட 6 பாடம் சித்தி)

## இணைப்பாட விதான செயற்பாடுகள் - 2015

**விளையாட்டுத்துறை** :- பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. அதில் பாடசாலையின் அனைத்து மாணவர்களும் பங்குபற்றி பரிசில்களை பெற்றுக் கொண்டனர். திறமைகாட்டிய மாணவர்கள் கோட்டமட்ட போட்டிகளில் பங்கு பற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழித்தினம்

பாடசாலை மட்டத்தில் தமிழ் தினம் எளிய முறையில் நடாத்தப்பட்டு சிறந்த மாணவர்கள் கோட்டமட்ட போட்டியில் பங்கு பற்றினர். கோட்டமட்டத்தில் செ. எழிலரசி - தனிநடன நிகழ்வில் 3ம் இடம் பெற்றார். ஆரம்பப் பிரிவு மாணவர்கள் விரைவு கணிதப் போட்டி, "செயற்பட்டு மகிழ்வோம்" மற்றும் ஆங்கில மொழி தினம் போட்டிகள், சமூகவிஞ்ஞான போட்டிகள், கணிதபுதிர் போட்டிகள், பொது அறிவுப் போட்டிகள் என்பவற்றுக்கு மாணவர்கள் பங்குபற்ற வழிப்படுத்தப்பட்டுள்ளது.

சைவ பரிபாலன சபையின் பரீட்சையில் அனைத்து மாணவர்களும் தமிழ்மொழி, சைவசமயம் பாடங்களில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வழிப்படுத்தப்படுகின்றனர். மேலும் பிரதேச செயலகம் மற்றும் நிறுவனங்கள் நடாத்தும் போட்டி நிகழ்வுகளும் மாணவர்கள் வழிப்படுத்தப்படுகின்றனர்.

## பாடசாலை நிர்வாக செயற்பாடுகள்

பாடசாலை அதிபர், ஆசிரியருடன் இணைந்த பாடசாலை முகாமைத்துவ அணியின் சீரான வழிகாட்டலில் நிர்வாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2015 ம் ஆண்டிற்கான S.L.I.G செயற்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் உயர்மட்ட செயற்பாடுகளான ஆசிரியமட்டம், மாணவர்மட்டம் நிதிகள் உரிய வகையில் மாணவர்க்கு பயன்படும் விதமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தரம் 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள், தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் பரீட்சை வழிகாட்டி வகுப்புக்கள் மெல்லக் கற்போர்களுக்கான எழுத்தறிவூட்டல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

பாடசாலை முகாமைத்துவ அணி. (S.M.T)

திரு.கு.திருச்செல்வம் (அதிபர்)

திரு.இ.சேதுநாதன் (பிரதி அதிபர்)

திரு.பூ.அகிலலோகநாயகம்

திருமதி.ச.குலசேகரம்

திருமதி.தே.தா.அ.கிறேஷியன்

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழு (S.D.C)
## (பாடசாலை அபிவிருத்திக் குழு - 2015)

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.கு.திருச்செல்வம் (அதிபர்) |
| உப தலைவர் | :- | திரு.இ.சேதுநாதன் (பிரதி அதிபர்) |
| செயலாளர் | :- | திருமதி.கி.சிவராணி |
| இணைச் செயலாளர் | :- | திருமதி.சு.வைத்திலிங்கம் |
| பொருளாளர் | :- | திருமதி.தே.த.அ.கிறேஷியன் |
| **உறுப்பினர்கள்** | :- | |

| | |
|---|---|
| திருமதி.த.சுதாகரன் | திரு.ப.கேதீஸ்வரன் |
| திருமதி.ப தேவமலர் | திருமதி.சு.உமாகரன் |
| திரு.சு.ஜெயலட்சுமி | திருமதி.க.தவமலர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை சுகாதார மேம்பாட்டுக்குழு

தலைவர் :- திரு.கு.திருச்செல்வம் (அதிபர்)
திருமதி.ச.குலசேகரம்
திருமதி.வா.மணிவண்ணன்
திருமதி.சு.வைத்திலிங்கம்
செல்வன்.ஞா.சயந்தகுமார்
செல்வி.ப.சஜித்தா
செல்வி.ப.வினோதிகா

## கட்டாயக்கல்விக்குழு (மாணவர் வரவழைக்கும் குழு)

தலைவர் :- திரு.கு.திருச்செல்வம் (அதிபர்)
திரு.இ.சேதுநாதன் (பிரதி அதிபர்)
திரு.மதி.த.சுதாகரன் (ஆசிரியர்)
திரு.சி.அருளானந்தசிவம்
திரு.சு.முருகையா
செல்வி.மு.விஜிதா (கிராம அலுவலர்)
திரு.த.கிஷோர் (ச.மு.உத்தியோகத்தர்)
திருமதி.தி.காண்டீபன்

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் அதிபர் தலைமையில் திருமதி.ச.குலசேகரம் செயலாளராகவும், திருமதி.வா.மணிவண்ணன் பொருளாளராகவும் செயற்பட்டு வருகின்றார். பாடசாலை வளர்ச்சிக்கு மாணவர் கல்வி மேம்பாட்டிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி குழுக்களும் சங்கங்களும் உரிய ஒத்துழைப்பும், அனுசரணையும் வழங்கிச் செயற்படுகின்றனர்.

2015ல் பாடசாலையில் போட்டோ பிரதி இயந்திரம் (A4 அளவு) ஒன்று S.L.I.G நிதியில் கொள்வனவு செய்யப்பட்டது. இல்ல விளையாட்டு போட்டிக்காக துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் நிதியுதவி செய்துள்ளன. மேலும் பரிசளிப்பு நிகழ்வுக்காக பழைய மாணவர் திரு.க.கருணாகரன் 20,000/= ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார். அந்த வகையில் பாடசாலைக்கு ஒத்துழைப்பும், உதவியும் வழங்கும் சமூக நிறுவனங்களும் பெற்றோர், பழைய மாணவர்களுக்கும் அதிபர் என்ற வகையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அவசிய தேவைகளாக இனங்காணப்பட்ட பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.

1. அலுவலக பயன்பாட்டிற்கு ஒரு கணினி இயந்திரம்.
2. சிறுவர் விளையாட்டு முற்றம் புனரமைப்பு.
3. விஞ்ஞான ஆய்வுகூட தளபாடங்கள் கொள்வனவு.
4. பாடசாலை சுற்றுமதில் - 150 நீளம் அமைத்தல்.
5. செயற்பாட்டறை, அழகியல் (சங்கீதம் / நடனம்) கூடம்

எனும் தேவைகள் இனங்காணப்பட்டு இவற்றுக்கான முன்மொழிவுகள் எமது 5 ஆண்டு திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக எமது இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளர், மா.ஆனந்தகுமார் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள், அதே போல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் தொழில் வழிகாட்டல் அலுவலர் திரு.ச.கிருபானந்தன், கலாச்சார உத்தியோகத்தர் திருமதி.ப.சிவஞானராஜா, கிராம உத்தியோகத்தர் செல்வி மு.விஜிதா ஆகியோருக்கும் எமது நன்றிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஆசியுரை வழங்கி, அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ சு.வரதராஜசர்மா அவர்களுக்கும், பழைய மாணவர் சங்க செயலாளர், மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிறப்பாக இன்று இங்கு வருகை தந்த அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் எமது பாடசாலையின் ஆசிரியர் அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இன்றைய மாணவர் நிகழ்வுகளில் மாணவர்களை பயிற்சி வழங்கி வழிப்படுத்திய சங்கீத, நடன பாட ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள். தொடர்ந்து வரும் காலங்களிலும் இங்கு பயிலும் மாணவர்களின் கல்வி விருத்திக்கு தங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பையும், உதவியையும் எதிர்பார்ப்பதுடன், பாடசாலையில் எதிர்கால வெற்றிக்கு அதிபர், ஆசிரிய குழாத்தின் முழுமையான முயற்சிகளையும் முன்னெடுப்போம் என உறுதி கூறி எனதுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றிகள்

26.05.2016 அதிபர்

திரு.கு.திருச்செல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுப்பட்டியல்

### வகுப்பு ரீதியாக முதன்மை பெறும் மாணவர்கள்

**2016 இல்**

தரம் 1

1. உ.சேனுஜன்
2. சி.சிந்துஜன்
3. ச.விதுசன்
4. ர.திருஸ்ரிகா

**2015 வகுப்பு நிலை**

தரம் 1

1. தி.பிரவீனா
2. சு.அபிநயா
3. வி.அனற்சியா

தரம் – 2

1. செ.கஜந்தன்
2. க.அஸ்வினா
3. ரா.சர்மி

தரம் - 3

1. ஞா.கோகிலன்
2. பு.தர்ணிகா
3. கு.கரீஷ்

**தரம் - 4**

1. ப.யதுஷன்
2. த.விக்னேஸ்வரி
3. சு.சுகிர்தா

**தரம் - 5**

1. க.அக்ஷனா
2. செ.மதுஷ்சன்
3. ரா.டிலக்ஷனா

**தரம் - 6**

ரா.டக்ஸ்சனா : சைவநெறி, தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சுகாதாரம், சங்கீதம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, PTS (11)

செ.எழில் அரசி : நடனம் (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் - 7**

கி.டர்சிகா : சைவநெறி, தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சுகாதாரம், சங்கீதம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, PTS (11)

**தரம் - 8**

கா.சங்கவி : சைவநெறி, தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், நடனம், சங்கீதம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, PTS (10)

பு.சங்கீதா : சுகாதாரம் (1)

சி.சுதர்சன் : சங்கீதம் (1)

**தரம் - 9**

கி.யதுஷன் : விஞ்ஞானம், தமிழ், சுகாதாரம், வரலாறு, சங்கீதம், புவியியல் (6)

ஞா.சயந்தினி : P.T.S, சைவநெறி, குடியுரிமைக்கல்வி, ஆங்கிலம் (4)

கு.தாட்சாயினி : கணிதம், நடனம் (2)

**தரம் - 10**

ப.சஜிதா : சைவநெறி, தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, குடியுரிமைக் கல்வி, சுகாதாரம், சங்கீதம் (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் - 11

க.கரிராஜ் : சைவநெறி, தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம், வர்த்தகம், சங்கீதம் (8)

கு.கிரிசாந் : குடியுரிமைக் கல்வி (1)

வி.நிலக்ஷனா : ஆங்கிலம் (1)

**2015 இல் சிறந்த மாணவன் மாணவிக்கான பரிசில்**

1. சிறந்த மாணவி - வி.நிலக்ஷனா
2. சிறந்த மாணவன் - பு.சஜிராஜ்

**க.பொ.த (சா/த)– 2015 சிறந்த பெறுபேறு பெற்றமைக்கான பரிசில்**

க.கரிராஜ் - 2A, 2B, 3C, S

**கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி – 2016**

செ.எழிலரசி - பிரிவு II இல் தனி நடனப் போட்டி 3ம் இடம்

**2015 – தரம் 5 புலமைப்பரிசில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்க்கான பரிசில்கள்**

1. செ.மதுஷன் - 113
2. க.அக்ஷனா – 107

**70க்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்கள்**

1. ரா.டிலக்சிகா
2. ரா.லெக்சனா
3. கி.அபிநயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org